**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறுவெளிக்களநிலையம் நடாத்தும்**

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2019
## Term Examination, March - 2019

| தரம் :- 13 | தொடர்பாடலும் ஊடககற்கையும் | இரண்டு மணித்தியாலம் |
|---|---|---|

**அறிவுறுத்தல் :-**

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **கணிப்பான்கள் பயன்படுத்த அனுமதி இல்லை.**
- **பின்வரும் வினாக்களில் மிகவும் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து விடைத்தாளில் புள்ளடியிடுக**

### பகுதி I

1) தொடர்பாடுபவர் மற்றும் பெறுநர் ஆகியோரின் ஒத்த தன்மையை தொடர்பாடல் மாதிரியொன்றின் மூலம் தெளிவாக முன்வைத்தவர்?
(1) ஹரோல். டீ. லாஸ்வெல் (2) டேவிட். கே. பெர்லோ
(3) செனோன் மற்றும் வீவர் (4) ஷ்ராம் மற்றும் ஒஸ்கூட்
(5) எட்வேட் சப்பியர்

2) சமூகப் பொறுப்புடமை வாத கருத்தியலுக்கு ஆதரவாக பணியாற்றியவர் எனக் கருதப்படுபவர்?
(1) ஸ்ருவர்ட் மில் (2) ஜோன் லொக் (3) தோமஸ் ஜெபர்சன்
(4) வில்பர் ஷ்ராம் (5) ஜோன் எர்ஸ்கைன்

3) தொடர்பாடுபவரின் எண்ணங்கள் செய்தியாக பெற்றுக்கொள்ளப்படும் செயன்முறை?
(1) புலக்காட்சி எனப்படும் (2) ஊடுகடத்துதல் எனப்படும்
(3) குறிமுறையாக்கம் எனப்படும் (4) பொருட்கோடல் எனப்படும்
(5) குறிமுறையவிழ்ப்பு எனப்படும்

4) நாளாந்த அடிப்படையில் மக்கள் பொதுவாக பயனபடுத்தும் தொடர்பாடல் வடிவம் எது?
(1) வாய்மொழித் தொடர் பாடல் (2) பேச்சுத் தொடர் பாடல்
(3) வாய்மொழி சாராத் தொடர்பாடல் (4) காட்சித் தொடர் பாடல்
(5) உடல் மொழித் தொடர் பாடல்

5) ஷினொன் மற்றும் வீவரின் தொடர்பாடல் மாதிரியின் அடிப்படையில் செலுத்தி என அறியப்படுவது?
(1) தடை (2) தகவல் (3) தொடர்பாடுநர்
(4) பெறுநர் (5) அனுப்பப்பட்ட சமிக்ஞை

6) பின்வரும் விடயங்களுள் தொடர்பாடல் செயற்பாடொன்றின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற முதன்மையான பணி அல்லாதது?
(1) ஊக்கப்படுத்துதல் (2) தகவல் வழங்குதல் (3) கல்வியூட்டுதல்
(4) தூண்டற் செயற்பாடு (5) மகிழ்வூட்டல்

7) தொடர்பாடல் சந்தர்ப்பமொன்றில் வேறுநபர்களின் தலையீடு இன்றி நிகழக் கூடிய தொடர்பாடலினை குறிப்பது?
(1) ஆட்களிடைத் தொடர்பாடல் (2) குழுத் தொடர்பாடல்
(3) வெகுசனத் தொடர் பாடல் (4) தனியாள் (ஆளுள்) தொடர்பாடல்
(5) பொதுசனத் தொடர்பாடல்

agaram.lk

8) தொடர்பாடலின் இயல்பை அறிமுகம் செய்வதில் மிகப்பொருத்தமான இயல்பாக அமைவது?
(1) தொடர்பாடல் மொழியின் அடிப்படையிலானது
(2) தொடர்பாடல் ஒரு இருவழிச் செயன்முறையாகும்
(3) தொடர்பாடல் இடையூறைக் கொண்டிருக்கும்
(4) தொடர்பாடல் பிரதிபலிப்புக்களின் அடிப்படையில் அமைந்திருக்கும்
(5) தொடர்பாடல் ஒரு செயன்முறையாகும்.

9) தொடர்பாடல் கற்கை நெறியினை உலகளாவிய ரீதியில் அறிமுகப்படுத்துவதில் முனைப்புடன் செயற்பட்ட நிறுவனமும் அதனால் முன்வைக்கப்பட்ட பிரகடனத்தையும் குறிப்பது?
(1) ஐரோப்பிய ஆணைக்குழு குரூன்வெல்ட் பிரகடனம்
(2) யுனஸ்கோ குரூன்வெல்ட் பிரகடனம்
(3) ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைப்பிரகடனம்
(4) உலக சுகாதார தாபனம் தொடர்புத் தகவல் பிரகடனம்
(5) சர்வதேச நாணய நிதியம் இறக்குமதி வரித்தீர்வைப் பிரகடனம்

10) ஹரோல்ட். டீ. லாஸ்வெல்லினால் முன்வைக்கப்பட்ட மாதிரியின் தலையாய அம்சம்?
(1) தொடர்பாடுநர் (2) என்னவிடயம் (3) ஊடகம் (4) பெறுநர் (5) தாக்கம்

11) புதிய தாராண்மைவாதக் கருத்தியலின் படி பூகோளமயமாக்கத்தின் பரவுகையை ஊக்குவிக்காத காரணியாக அமைவது?
(1) துணைத்தேசிய கம்பனியாக்கம்
(2) சந்தை விரிவாக்கம்
(3) தடையில்லா வர்த்தகம்
(4) தேசிய அரசுகள் வலுப்படுத்துதல்
(5) அரசிடமிருந்து பொருளாதாரத்தை விடுவித்தல்

12) ஆட்களிடைத் தொடர்பாடலுக்கு உரித்து அல்லாத பண்பாக கொள்ளத்தக்கது?
(1) இடைத்தொடர்புகளை விருத்தி செய்ய உதவுதல்
(2) தன்னெழுச்சியாக உருவாகும் அம்சங்களை கொண்டிருத்தல்
(3) வளர்ச்சிக்கான அம்சம் புறமொதுக்கப்பட்டிருத்தல்
(4) இருவர் அல்லது சிலருக்கிடையே நடைபெறும் தொடர்பாடல்
(5) கிளர்வூட்டல் செயன்முறையை கொண்டிருத்தல்

agaram.lk

13) மனித தொடர்புகளை உருவாக்கும், கொண்டு செல்லும் மற்றும் அதனை விருத்தி செய்யும் கருவி தொடர்பாடலாகுமென விளக்கத்தினை முன்வைத்தவர்?
(1) சாள்ஸ் கூலி (2) ஹரோல். டி. லாஸ்வெல் (3) வோல்ட்டர் லிப்மன்
(4) ஷெனொன் வீவர் (5) ஜோன் டூவி

14) ஊடகங்கள் நேரடியாக ஒழுங்குமுறைப்படுத்தப்பட முடியுமாவது?
(1) வெகுசன ஊடகங்களுக்கான ஒழுக்க நெறிகளால் ஆகும்
(2) மரபார்ந்த வழிமுறைகளால் ஆகும்
(3) சுதந்திரமான சிந்தனையால் ஆகும்
(4) சட்ட வழிமுறைகளினால் ஆகும்
(5) ஊடக இணக்கப்பாடுகளினால் ஆகும்.

15) மானுடத் தொடர்பாடல் வரலாற்றில் முதல் இரு தொடர்பாடல் வடிவங்கள் யாவை?
(1) வாய்மொழி மற்றும் முறைசாராத் தொடர்பாடல்
(2) வாய்மொழி மற்றும் பேச்சுத் தொடர்பாடல்
(3) சைகை மொழி மற்றும் வாய்மொழித் தொடர்பாடல்
(4) எழுத்து மற்றும் காட்சித் தொடர்பாடல்
(5) சைகை மொழி மற்றும் உடல் மொழித் தொடர்பாடல்

16) தற்கால பூகோள மயமாக்கம் பற்றிய கருத்தியல்
(1) மார்க்சிசம் (2) தாராண்மைவாதம் (3) தேசிய வாதம்
(4) பாசிசம் (5) ஜனநாயகம்

17) அபிவிருத்தி என்பது நவீன உலகில் பேய்வேடம் பூண்டுள்ள சில சக்திகளைத் தாக்குதலாகும் என்று சாரப்பட்ட சிந்தனையை முன்வைத்தவர்?
(1) வில்பர் ஷ்ராம் (2) டட்லி சியர்ஸ் (3) விமல் திசாநாயக்க
(4) எவரட். எம். ரொஜர்ஸ் (5) போல். பீ. ஸ்டீவன்

18) அபிவிருத்தி தொடர்பாடல் எண்ணக்கரு ஸ்தாபிக்கப்பட்டது?
(1) தொழில்நுட்ப புரட்சியின் ஆரம்பத்திற்கு பின்னர்
(2) முதலாம் உலகப் போரின் பின்னர்
(3) இரண்டாம் உலகப் போரின் பின்னர்
(4) பனிப்போர் முடிவின் பின்னர்
(5) பூகோள மயமாக்கல் செயன்முறையின் ஆரம்பத்துடன்.

19) தவறான கூற்றைத் தெரிவு செய்க?
(1) ஓசை, சொற்களைப் பயன்படுத்தி நடைபெறும் தொடர்பாடல் வாய்மொழித் தொடர்பாடலாகும்.
(2) பேச்சு அல்லது எழுத்து மொழிப்பாவனையன்றி தகவல் வழங்குதல் வாய்மொழி அற்ற தொடர்பாடலாகும்.
(3) சைகை மொழி வாய்மொழியற்ற தொடர்பாடலில் உள்ளடங்குகிறது
(4) வாய்மொழித் தொடர்பாடல் எழுத்து தொடர்பாடல் முறைகளை உள்ளடங்கியிருக்கும்.
(5) பேச்சுத் தொடர்பாடல் எழுத்து தொடர்பாடல் முறைகளை உள்ளடக்கியிருக்கும்.

20) அபிவிருத்தி தொடர்பாடல் பற்றிய கருத்தியலில் சீனமாதிரியில் முன்வைக்கப்பட்டுள்ள அம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன அவற்றுள் பொருத்தமில்லாத அம்சம்?
(1) அறியும் ஆற்றல் (2) அளவீடு (3) பின்பற்றுதல்
(4) சாரம்சப்படுத்துதல் (5) செயலுக்கு மாற்றுதல்

agaram.lk

21) ஒரு பேச்சாளன் தனது சொந்த இலக்கை அடைவதற்காக வாய்மொழிச் செயற்பாடாகவோ வாய்மொழி அல்லாத செயற்பாடாகவோ தகுந்த விவாத தந்திரோபாயங்களை முன்வைத்து நிகழ்த்தும் பேச்சு தொடர்பாடல் என ரிடோரிக் (Rhetoric) எனும் நூலில் குறிப்பிட்டவர்?
(1) அரிஸ்ரோட்டில் (2) பிளேற்றோ (3) ஷெனொன் வீவர்
(4) ஜோன் டூவி (5) மார்ஷல் மெக்லுஹான்

22) பின்வரும் பிரச்சினைகளில் எது மொழி தொடர்பான இடையூறு ஏற்பட முக்கிய அம்சமாக அமையக்கூடியது?
(1) செய்திகளின் கடத்துகை (2) தொடர்பாடல் பற்றிய தீர்மானம்
(3) பெறுநர்களின் பலவீனம் (4) குறியீடுகளின் தெரிவு
(5) தொழில்நுட்பத் தடைகள்

23) சுய எண்ணக்கரு (Self concept) என்பது?
(1) ஒருவர் தொடர்பில் ஏனையவர்களிடம் உருவாக்கப்படும் ஒரு வலுவான சிந்தனை
(2) ஒருவர் தொடர்பில் ஒப்பீட்டளவில் உறுதியான பார்வை நோக்கு (Perception)
(3) ஒருவர் தொடர்பில் ஏனையவர்கள் மேற்கொண்ட கணிப்பீடு
(4) ஒருவர் கொண்டுள்ள சுயம் தொடர்பிலான தொடர்ந்து மாற்றமடையும் அபிப்பிராயம்
(5) ஒருவர் தொடர்பில் சுயமாக உருவாக்கப்படும் பிரதிமை (image)

24) பண்பாடு என்பது ஒரு குறித்த சமூகத்தினால் பகிரப்பட்ட மற்றும் ஊடுகடத்தப்பட்ட அங்கத்துவக் கூறுகளான கற்றுக் கொண்ட நடத்தைகள் மற்றும் நடத்தைகளின் பெறுபேறுகளின் உருவமாக அமைவது எனக் கூறியவர்?

(1) காஸ்பர் மலினோவுஸ்கி (2) எட்வேர்ட் டெய்லர் (3) ரால்ப் லிண்டன்
(4) ஆனந்த குமாரசாமி (5) ரேமண்ட் வில்லியம்ஸ்

25) அண்மையில் நாட்டில் ஏற்பட்ட அரசியற்சூழ்ச்சி காரணமாக சட்டத்தையும் சமாதானத்தையும் நிலைநிறுத்தும் முகமாக சமூக ஊடகங்கள் தணிக்கை செய்யப்படுவது அந்த ஊடகங்களின் செய்தியானது?

(1) பெறுநர்கள் மத்தியில் மிக வேகமாக பரவுவதன் காரணத்தினாலாகும்.
(2) உயரிய நம்பிக்கையை பெற்றிருப்பதனாலாகும்
(3) பகுப்பாய்வுடன தகவல்கள் முன்வைக்கப்படுவதனாலாகும்
(4) தகவல்கள் அதிகாரம் மிக்க மூலகங்களின் அடிப்படையில் மாத்திரம் முன்வைக்கப்படுவதனாலாகும்
(5) தகவல் மூலகங்கள் சரியான நம்பகத்தன்மையுடையதாக காணப்படாமை

26) மாற்று ஊடகம் தொடர்பிலான பொருத்தமான கூற்றாக அமையாதது?

(1) பிரசித்தமான பண்பாட்டுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிராதது.
(2) பிரதான துறை ஊடகங்களுக்கு எதிரான தன்மையை வெளிக்காட்டும்
(3) தீவரமாகும் ஊடக அதிகார போக்கினால் உருவான ஊடகவியல்
(4) இலாப நோக்கத்தை முதன்மையானதாக கொண்டிராத போக்கு
(5) கருததியல் சார் நிலைப்படுகளிற்கு முன்னுரிமை வழங்காத தன்மை

27) ஊடகப்பண்பாடு பற்றிய வானொலி நிகழ்ச்சியொன்றில் கலந்துரையாடப்பட்ட சில பார்வைகள் கீழே காட்டப்பட்டுள்ளது?

A. இது மேலைத்தேயப் பண்பாட்டின் அடிப்படையிலானது
B. இது ஊடகத் தொழினுட்பத்துடன் இணைச் சேர்க்கையானது
C. சமூக இயங்கியலக்கு அமைவாக ஒழுங்குபடுத்தப்பட்டது
D. இயற்கையான ஒரு செயன்முறை என்பதனை விட இதுதிட்டமிடப்பட்ட ஒரு செயன்முறையாகும்.

மேற்குறித்த வற்றில் உண்மையானது.

(1) A,B ஆகியன மாத்திரம் (2) A,C ஆகியன மாத்திரம்
(3) A,B,C ஆகியன மாத்திரம் (4) B,C,D ஆகியன மாத்திரம்
(5) A,B,C,D ஆகியன யாவும்

28) புதிய திரைப்படமொன்று திரையிடப்பட்டு சில நாட்களுக்குப்பின்னர் அது பற்றிய கலந்துரையாடல்கள் ஓய்வறைகளிலும் சிற்றூண்டிச் சாலைகளிலம் நடைபெற்றமை அந்த திரைப்படம் தொடர்பான பிரபல்யம் அதிகரிப்பதில் செல்வாக்குச் செலுத்தியது. இதன்படி பிரபல்யம் அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்தது?

(1) ஆளிடைத் தொடர்பாடல் (2) வாய்மொழித் தொடர்பாடல்
(3) பிரசித்தமான அல்லது புகழ்பெற்ற பண்பாடு (4) முறைசாரத் தொடர்பாடல்
(5) வெகுசனத் தொடர்பாடல்

29) பின்வரும் கூற்றுக்களைக் கவனமாக வாசிக்குக.


A. ஒருவரின் கருத்துக்கள் செயற்பாடுகளின் மூலம் ஏனையவர்களை கவருதல்
B. ஒருவரின் அசண்டையீனத்தினால் ஏற்பட்ட இழிநிலை பற்றி நோக்குதல்
C. ஒருவரின் எண்ணங்கள் அபிலாசைகளுடன் இசைந்து இருத்தல்

மேற்குறித்தவற்றில் A, B, C ஆகியன ஒழுங்குமுறையே குறிப்பதனை சரியாக புலப்படுத்துவது.

(1) புலக்காட்சி, ஆழ்பரிவு, சமூகசகவாழ்வு
(2) ஆழ்பரிவு, சகவாழ்வு, தன்வயப்படுத்துதல்
(3) தன்வயப்படுத்துதல், ஆழ்பரிவு, ஒத்துணர்வு
(4) சமூகசகவாழ்வு, புலக்காட்சி, துருவ நிலையடைதல் (Polarization)
(5) ஒத்துணர்வு, விளங்கறிவு, புலக்காட்சி

agaram.lk

❖ **30 தொடக்கம் 34 வரையுள்ள வினாக்களிற்கு விடையளிப்பதற்கு பின்வரும் வரைபடத்தினை பயன்படுத்துக.**




30) மேற்படி மாதிரியில் D அனுப்பட்ட சமிக்ஞையாக கருதப்படமுடியுமானால் பெறுகையாக கருதப்படுவது?

(1) A (2) C (3) I (4) F (5) G

31) மேற்படி மாதிரியில் குறிமுறையாக்கச் செயற்பாடு நடைபெறுமாயின் அது நடைபெறுவதனை குறிக்கும் எழுத்து?

(1) A (2) C (3) F (4) H (5) I

32) மேற்படி மாதிரியில் அனுப்பட்ட தகவல் பெறுநரைச் சென்றடையாது தடைப்பட்டது அதனை அடையாளப்படுத்தும் பிரதான காரணி?

(1) A இன் செல்வாக்கு (2) C இன் செல்வாக்கு (3) F இன் செல்வாக்கு
(4) H இன் செல்வாக்கு (5) I இன் செல்வாக்கு

33) மேற்குறித்த மாதிரியின் அடிப்படை அம்சங்களில் அதனோடு தொடர்புபடாதது?

(1) பின்னூட்டல் செயன்முறையை அடிப்படையாகக் கொண்டது
(2) நேர்வழித் தொடர்பாடல் தன்மையை விளக்கி நிற்பது
(3) ஒரு வழிச் செயன்முறையுடன் தொடர்புபட்டது
(4) முதன்முதலில் குறிமுறையாக்கம் குறிமுறையவிழ்ப்பு தொடர்பாக கருத்து முன்வைத்துக் கொண்டது
(5) தொலைபேசித் தொடர்பாடல் சந்தர்ப்பத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

34) மேற்குறிப்பிட்ட மாதிரியுரு தவிர்ந்த இருவழித் தொடர்பாடல் செயன்முறைக்கு உட்படாத மாதிரிகளை கொண்ட தொகுதி?

(1) ஹரோல். டீ. லாஸ்வெல்மாதிரி, அரிஸ்ரோட்டில் மாதிரி, வில்பர் ஷ்ராம் மாதிரி
(2) ஒஸ்கட் வில்பர் ஷ்ராம் மாதிரி, ஷனொன் வீவர் மாதிரி, அரிஸ்ரோட்டில் மாதிரி
(3) ஹரோல். டீ. லாஸ்வெல்மாதிரி, ஷனொன் வீவர் மாதிரி, டேவிட். கே. பெர்லோ
(4) ஹரோல். டீ. லாஸ்வெல்மாதிரி, அரிஸ்ரோட்டில் மாதிரி, டேவிட். கே. பெர்லோ
(5) ஹரோல். டீ. லாஸ்வெல்மாதிரி, டேவிட். கே. பெர்லோ, ஒஸ்கூட் வில்பர் ஷ்ராம் மாதிரி

35) இரண்டு நபர்களுக்கிடையேயான முதலாவது சந்திப் பொன்றில் நிகழும் பொதுத் தொடர்பாடலில் காணக்கிடைக்க கூடிய அம்சங்கள் கீழே தரப்படுகின்றன.

A. பொதுவான தகவல்களைப் பகிர்ந்து கொள்ளுதல்
B. சிந்தனைகளை வெளிப்படையான மற்றும் முழுமையான நம்பிக்கையுடன் பரிமாறிக் கொள்ளல்
C. ஒருவருக்கொருவர் புன்னகையுடன் தலையை அசைத்துக் கொள்ளல்
D. தனிப்பட்ட தகவல்களைப் பரிமாறிக் கொள்ளுதல்.

மேற்குறித்தவற்றில் இருந்து குறித்த தொடர்பாடல் செயன்முறையில் ஆரம்பத்தில் இருந்து வரிசைக்கிரமமாக இடம்பெற்றிருக்க கூடிய நிகழ்வுகள்?

(1) A, C, D மற்றும் B (2) B, C, D மற்றும் A (3) C, A, D மற்றும் B
(4) C, D, B மற்றும் B (5) D, B, A மற்றும் C

agaram.lk

36) ஊடகச் செயற்பாட்டைப் பாதிக்க கூடிய வேறுபட்ட காரணிகளைக் கொண்ட சில குழுக்கள் கீழே தரப்படுகின்றன.

A. ஊடக உரிமையாளர், சட்டம், சுயகட்டுப்பாடு

B. விளம்பர தாரர்கள், பெறுநர்கள், ஊடக மூலகங்கள்

C. ஊடக நிறுவனங்கள், அரசு, ஊடகவியலாளர்கள்

இவற்றுள் ஊடகத் தொழிற்பாட்டுடன் தொடர்புடையவை உள்ளடக்கப்பட்டிருப்பது.

(1) குழு A இல் (2) குழுக்கள் A இலும் B இலும்

(3) குழுக்கள் A இலும் C இலும் (4) குழுக்கள் B இலும் C இலும்

(5) A,B,C ஆகிய சகல குழுக்களிலும்

37) வாய்மொழியல்லாத் தொடர் பாடல் குறித்து ஒரு தொகுதி மாணவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் வருமாறு?

நிமல் :- வாய்மொழித் தொடர்பாடலிலும் வாய்மொழியல்லாத் தொடர்பாடல் நடைபெறும்

அமல் :- வாய்மொழி அல்லாத் தொடர்பாடல் உடல்மொழி சைகைமொழி ஆகியவற்றின் அடிப்படையில் நிகழ்வது

கமல் :- வாய்மொழியல்லாத் தொடர்பாடல் பண்பாட்டு அடிப்படையிலானது

விமல் :- முயற்சியின்றி வாய்மொழியல்லாத் தொடர்பாடல் இடம் பெறும்.

வாய்மொழியல்லாத் தொடர் பாடல் குறித்து சரியான கூற்றுக்களை வெளியிட்டவர்.

(1) அமல் மற்றும் கமல் (2) அமல், விமல், மற்றும் கமல்

(3) விமல் மற்றும் நிமல் (4) நிமல், கமல் மற்றும் விமல்

(5) நிமல், அமல், கமல் மற்றும் விமல்

38) நாட்டில் ஏற்பட்ட அரசியல் ரீதியிலான குழப்பங்களினால் ஸ்திரத்தன்மையற்ற சூழல் ஒன்று உருவாகியது இதனால் நாட்டின் அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் தமது அரசியல் நிலைப்பாடுகளினை தெளிவுபடுத்துவனாக ஊடகசந்திப்பு ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் அரசியல் கட்சித் தலைவர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டியது.

(1) பங்கேற்கும் ஊடகவியலாளருக்கு சிறப்பான உபசரிப்பைத் தயார்செய்தலாகும்.

(2) ஊடகவியலாளருக்கு பெறுமதி வாய்ந்த அன்பளிப்பொன்றை நினைவுப் பரிசாக வழங்குவதிலாகும்.

(3) ஊடகவியலாளருக்கு அரசியல் கட்சிகள் தமது முன்னைய ஆண்டறிக்கைகளினை வழங்குவதிலாகும்.

(4) அரசியல் கட்சிகள் மேற்கொள்ளும் சமூக உதவிச் செயற்றிட்டம் பற்றி விவரித்தலிலாகும்.

(5) கேட்கப்படலாம் என எதிர்பார்க்கப்படும் வினாக்களிற்கான பதில்களை தயார்படுத்தி கொள்வதிலாகும்.

39) ஒரு நாட்டின் பேண்தகு நீடித்து நிலைத்து நிற்கும் அபிவிருத்தி எனப்படுவது?

(1) விவசாயத்தில் முழுமையான தன்னிறைவு

(2) கட்டடங்களையும் நெடுஞ்சாலைகளையும் இயலுமான வகைகளிலெல்லாம் அமைத்துக் கொள்ளல்

(3) சூழலுக்கு பொருந்தக்கூடிய செயன்முறை

(4) போக்குவரத்து தொடர் பாடல் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்தல்

(5) உலகமயமாதலுக்கு ஏற்றவகையில் நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்தல்.

40) அரசாங்கத்தினால் நாட்டு மக்களின் தேவையை அடிப்படையாக கொண்டு வீட்டுத்திட்டம் வழங்குவதற்கு என தீர்மானிக்கப்பட்டது இதற்குரிய தகவல்களை திரட்ட வேண்டிய தேவை காணப்பட்டது எனவே இதனை முன்னெடுப்பதற்கு அதிமுக்கியத்துவம் வாய்ந்த தகவல் திரட்டும் உபகரணம்?

(1) வினாக்கொத்து (2) பேட்டி (3) அவதானம்

(4) முளைப்புயல் (5) குழுகலந்துரையாடல்

agaram.lk

41) ஒரு குறித்த கம்பனியின் தொழிற்சங்கம் 100% சம்பள அதிகரிப்பினைக் கோரி வேலைநிறுத்தம் ஒன்றை மேற்கொண்டது. இங்கு வெற்றி வெற்றி மாதிரிக்கு வலுவூட்டக்கூடிய நடவடிக்கையாக அமையக் கூடியது?
(1) தொடர்ச்சியாக இணக்கப் பேச்சுக்கள் மூலம் தீர்வொன்றுக்கு வரமுயற்சித்தல்
(2) 50% சதவீத சம்பள அதிகரிப்பு கருத்தில் கொள்ளப்படலாம் என நிர்வாகம் அறிவிப்பு செய்தல்.
(3) வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டோர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படாது என நிர்வாகம் இணக்கத்துக்கு வருதல்
(4) 35% சதவீத சம்பள அதிகரிப்புடன் பணியாளர்கள் வேலைக்கு திரும்புதல்
(5) பணிக்குத் திரும்புபவர்களுக்கு ஒரு சம்பள உயர்ச்சி வழங்க நிர்வாகம் இணங்குதல்.

42) பிரபலகல்லூரியொன்றின் ஊடக கழக மாணவர்களிடையே நடைபெற்ற கலந்துரையாடல் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| அசந் | :- | இலங்கையின் முதல் செய்திப்பத்திரிகை லங்காலோகய |
| வசந் | :- | இலங்கையின் முதல் தமிழ்ப்பத்திரிகை உதயதாரகை |
| சுசீந் | :- | இலங்கையின் இந்துமத மறுமலர்ச்சி ஏற்படுத்திய பத்திரிகை இந்து சாதனம் |
| ரொஷாந் | :- | இலங்கையின் முதல் சிங்களப்பத்திரிகை லக்மினிபஹன |
| மதுஷாந் | :- | இலங்கையின் முதலாவது வானொலிசேவை ரேடியோ சிலோன் ஆகும். |

மேற்குறித்தவற்றுள் சரியான கூற்றுக்களை வெளிப்படுத்துவது?
(1) அசந், வசந், சுசீந் (2) வசந், சுசீந், மதுஷாந் (3) சுசீந், ரொஷாந், மதுஷாந்
(4) வசந், ரொஷாந், மதுஷாந் (5) அசந், வசந், சுசீந், ரொஷாந், மதுஷாந்

43) பொதுசன உறவு பற்றிய பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க,
(1) பொதுசனத்தினர் முக்கியமான பங்காளர்கள்
(2) எப்போதும் பணத்தினை வழங்குவதன் மூலம் பொதுசன உறவு நிறைவேற்றப்பட முடியும்
(3) உறவுகளை கட்டியமைத்தல் முன்னுதாரணமான செயற்பாடு
(4) பல்வேறு பகுதியினருக்கு அது ஆதாயங்களினை வழங்கும்
(5) நன்மையே பயக்கும் விழிப்புணர்வு அடிப்படை இலக்காக அமைந்திருக்கும்.

44) தகவல் அறியும் சட்ட மூலம் எமது நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்துள்ள நிலையில் இச்சட்டமூலம் அறிமுகம் தொடர்பு படும் எண்ணக்கரு?
(1) அதிகாரவாத எண்ணக்கரு
(2) சமூக பொறுப்புடமை எண்ணக்கரு
(3) சுதந்திரவாத எண்ணக்கரு
(4) சோவியத் பொதுவுடமை எண்ணக்கரு
(5) ஜனநாயக பங்கெடுப்பு எண்ணக்கரு

45) இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் உருவாக்கத்தில் வலுவான போட்டித்தன்மை அதிகரிப்பதற்குக் காரணம்.
(1) அரசியல் குடும்ப அதிகாரத்தின் உறவு நிலை
(2) வரையறுத்த அளவில் காணப்படும் அலைவரிசை ஒதுக்கீட்டு அமைப்பு
(3) வர்த்தக வாணிப முயற்சிகளின் நேரடிப் பங்கேற்பு காணப்படுதல்
(4) பொதுசன அபிப்பிராயத்தினை உருவாக்குவதற்கான பரந்த மத்தியஸ்த பணி
(5) வெகுசனத் தொடர்பாடல் செயன்முறையின் அனுசரனையாளராக செயற்படுதல்

46) ஊடகப் பண்பாட்டு ஆக்கிரமிப்பு தொடர்பாக சில கூற்றுக்கள் கீழே தரப்படுகின்றன.
A. இது இயல்பானதொரு விடயமாகும்
B. அந்நியர்கள் வருகை ஆக்கிரமிப்புடன் தொடர்புடையது
C. நவீன கல்வி முறை அறிமுகம்
D. இலங்கையில் வெகுசன ஊடகங்களின் அறிமுகம்
E. ஒரு சமூக கலாசார விடயம் மீது தமது கலாசாரத்தை உட்புகுத்தல்
இவற்றுள் மிகப்பொருத்தமான கூற்றுக்கள்.
(1) A,B, ஆகியன (2) A,B,C ஆகியன (3) A,D,E ஆகியன
(4) B,C,D ஆகியன (5) C,D ஆகியன

47) கீழ்வரும் கூற்றுக்களில் ஊடகவிளங்கறிவு எனும் விடயத்தோடு தொடர்புபடாத அம்சம்.
(1) ஊடகவிளங்கறிவு என்பது ஊடக உள்ளடக்கத்தைப் பகுப்பாய்வு செய்தலாகும்
(2) ஊடகவிளங்கறிவு என்பது ஊடகத்தினை மதிப்பீடு செய்தலாகும்.
(3) ஊடகவிளங்கறிவின் அடிப்படையானது வாசிக்கவும் எழுதவும் முடியுமான தகைமையாகும்
(4) செய்திகளை உருவாக்குவதும் திறனாய்வதும் ஊடகவிளங்கறிவின் ஒரு பகுதியாகும்.
(5) ஊடகவிளங்கறிவின் மூலம் விழிப்புணர்வு மிக்க பெறுநரை உருவாக்கிக் கொள்ள முடியும்.

48) பின்வரும் மொழி பற்றிய கருத்தியல்களில் வானொலி ஊடாக மொழிப்பாவனையுடன் தொடர்பு படாத கூற்று.
(1) வசனத்தை முடிக்கும் போது பெறுநர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.
(2) எளிமையான இலகு மொழி நடையைக் கொண்டிருத்தல்
(3) மொழியில் இடம் பெறுகின்ற வேற்றுமைகள் தெளிவாக விளங்கிக்கொள்ளப்பட வேண்டும்.
(4) கற்பனாவாத தன்மையை வெளிக்காட்டக்கூடிய மொழி நடை
(5) ஆவணப்படுத்தி பெறுகை செய்யக்கூடிய மொழிப்பாவனை

49) ஊடக பௌதீக பண்பாட்டினதும் தொழில்நுட்பத்தினதும் துரித வளர்ச்சிக்குச் சமாந்தரமாக ஊடக விளங்கறிவும் ஊடகத் திறன்களும் வளரப்பெறவில்லை என்பது தற்போதைய ஊடகப்பண்பாடு எதிர் கொள்ளும் ஒரு பிரச்சினையாகும். பண்பாட்டுக் கற்கைகளில் இது அறியப்படுவது?
(1) பண்பாட்டுச் சிதைவு என்றாகும்
(2) பண்பாட்டு பரவல் என்றாகும்
(3) பண்பாட்டு விருத்தி என்றாகும்
(4) பண்பாட்டுத் தேக்கம் என்றாகும்
(5) பண்பாட்டுப் பன்மைத்துவம் என்றாகும்.

50) அபிவிருத்தி தொடர்பாடல் வழிமுறைகள் பற்றித் தீர்மானிப்பதில் கவனத்திற் கொள்வதற்கென பிரேரிக்கப்பட்டுள்ள சில கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன?
A. அவை புதிய தொழினுட்ப அபிவிருத்தியுடன் இணைந்து நடைமுறைப்படுத்தக்கூடியன
B. உரிய விடயம் தொடர்பில் நிபுணத்துவம் கொண்டோரினால் திட்டங்கள் தயாரிக்கப்படுவது அவசியமாகும்.
C. அவை பாரம்பரிய தொடர்பாடல் வழிமுறைகளுடன் இணைய ஊடகவழிகளை கண்டறிவது சிறப்பானது
D. அவை இலக்கு வைக்கப்பட்ட சமூகத்திற்கு மாத்திரமான திட்டமிடப்பட்ட தொடர்பாடல் வழிமுறைகளாக அமைவது
E. பலன் தரக்கூடியவாறு மொழியைப் பயன்படுத்தும் ஆற்றல் தொடர்பான வழிப்புணர்வு கட்டாயமானது

இவற்றுள் உண்மையான கூற்றுக்கள்.
(1) A, B, D மற்றும் E மாத்திரம்
(2) A, B, C மற்றும் D மாத்திரம்
(3) A, C, D மற்றும் E மாத்திரம்
(4) B, C, D மற்றும் E மாத்திரம்
(5) A, B, C, D, E ஆகிய யாவும்

agaram.lk

FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறுவெளிக்களநிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2019
## Term Examination, March - 2019

| தரம் :- 13 (2019) | தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் | மூன்று மணித்தியாலம்<br>மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம் |
|---|---|---|

### பகுதி II

**அறிவுறுத்தல் :**

- ❖ **ஐந்து** வினாக்களிற்கு மாத்திரம் விடை தருக.
- ❖ ஒவ்வொரு வினாவிற்கும் **20 புள்ளிகள்** வீதம் வழங்கப்படும்

01) "தொடர்பாடல் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டது.

i. தொடர்பாடலின் மூலம் நிறைவேற்றப்படுகின்ற **நான்கு** பிரதான பணிகளைப் பெயரிடுக?

ii. கூட்டுத் தொடர்பாடலினை சரியாகத் திட்டமிடுவதன் மூலம் வெற்றிகரமானதாக்கலாம். இதன் போது தொடர்பாடுநர் பின்பற்றவேண்டிய **நான்கு** விதிமுறைகளை குறிப்பிட்டு ஒன்றினை விபரிக்குக?

iii. ஆளுள் தொடர்பாடலின் அடிப்படைப் பண்புகள் **நான்கினைக்** குறிப்பிட்டு அவற்றுள் இரண்டிணைப் பற்றி குறிப்புகள் எழுதுக?

iv. வாய்மொழியல்லாத தொடர்பாடலின் பண்புகள் **நான்கினை** விபரிக்குக.

02) மானுட உயிர்வாழ்விற்கு தொடர்பாடல் அவசியமான ஓர் அம்சமாகும்.

i. குளோட்ஷெனன் மற்றும் வோரன் வீவரின் தொடர்பாடல் பற்றிய வரைவிலக்கணத்தை தருக?

ii. செவிமடுத்தல் தேர்ச்சியை பாதிக்கும் **நான்கு** அம்சங்களினை பெயரிடுவதோடு செவிமடுத்தலை விருத்தியாக்கும் **நான்கு** விடயங்களினையும் குறிப்பிடுக.

iii. அ) சமூகமயமாதலில் செல்வாக்கு செலுத்தும் நான்கு நிறுவனங்களினைப் பெயரிடுக.
ஆ) சமூக கட்டமைப்பு என்பதில் இருந்து நீர் விளங்குவது யாது என உதாரணங்களுடன் விபரிக்குக.

iv. தொடர்பாடலின் இயல்பை விளங்கிக் கொள்வதற்கு அதன் தனித்துவமான பண்புகள் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும் அவ்வாறான பண்புகள் **நான்கினைக்** குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றையும் தனித்தனியே விபரிக்குக.

agaram.lk

03) மொழியின் தோற்றத்தோடு கருத்துக்கள் மற்றும் கோட்பாடுகளின் தன்மையும் நீட்சியைப் பெற்றது.

i. கிளைமொழி அல்லது துணைமொழியின் இயல்புகள் **நான்கினைக்** குறிப்பிடுக?

ii. வானொலி ஊடகநிகழ்ச்சிக்கு பிரதிகள் தொகுப்பாக்கம் செய்யும் போது கவனிக்கவேண்டிய விடயங்கள் **நான்கினைக்** குறிப்பிட்டு இரண்டினை விளக்குக?

iii. வெகுசன ஊடகங்களில் மொழிப்பயன்பாட்டிற்கான வரையறைகள் காணக்கிடைக்கின்றன. தொலைக்காட்சி, புதிய ஊடகங்கள் ஒவ்வொன்றிலும் தாக்கம் செலுத்துகின்ற அத்தகைய வரையறைகள் தலா **மூன்றினைச்** சுருக்கமாக விபரிக்குக?

iv. வெகுசன ஊடகங்களின் வாயிலாக வன்முறைச்சித்தரிப்பு கவர்ச்சிகரமான முறையில் முன்வைக்கப்படுகின்றன. அந்த வகையில் ஊடகவன்முறை வெளிப்படுத்தப்படும் தன்மைகளினை விமர்சனரீதியாக விளக்குக?

*04)*

i. பிரசித்தமான பண்பாட்டின் பண்புகள் **நான்கினைக்** குறிப்பிடுக?

ii. முரண்பாடுகள் தொடர்பான ஜோஹன் கல்ரங்கின் (John Gultung) மற்றும் ஆபிரகாம் மாஸ்லோவின் தேவைக் கூம்பு ஆகியவற்றை வரைந்து குறிப்பிடுக?

iii. மன அழுத்தத்தின் பிடியில் இருந்து விடுபடப் பிரயோகிக்க கூடிய **ஆறு** தொடர்பாடல் வழிமுறைகளினை பெயரிட்டு அவற்றுள் **மூன்றை** விபரிக்குக?

iv. வீட்டின் அமைதியும் ஒத்திசைவும் வீழ்ச்சியுறுவதன் விளைவாக குடும்பத்தில் வெளிப்படக்கூடிய **நான்கு** ஆரோக்கியமற்ற குணங்குறிகளை குறிப்பிட்டு அவற்றினால் தொடர்பாடலுடன் தொடர்புடையதாக உருவாகும் எதிர்விளைவுகளை விளக்குக?

*05)*

i. ஊடகப் பண்பாடு தொடர்பாக எட்வேர்ட் ரெய்லரினால் முன்வைக்கப்பட்டுள்ள வரைவிலக்கணத்தில் உள்ளடங்கும் கூறுகளை பெயரிடுக?

ii. ஊடகப் பண்பாட்டின் **நான்கு** இயல்புகளைப் பெயரிட்டு அவற்றுள் **ஒன்றைச்** சுருக்கமாக விபரிக்குக?

iii. பிரசை ஊடகவியலின் பண்புகள் **நான்கினைக்** குறிப்பிட்டு பிரதான ஊடகவியலாளரில் இருந்து பிரசை ஊடகவியலாளர் வேறுபடும் தன்மையை விளக்குக?

iv. ஊடக விளங்கறிவுடன் இணைந்த **நான்கு** திறன்களினை சுருக்கமாக விபரிப்பதோடு அதன் முக்கியத்துவம் தொடர்பில் **நான்கு** அம்சங்களினூடாக ஆராய்க?

*06)* ‘‘நிறுவனம் ஒன்றின் நன்மதிப்பு பொதுசனத் தொடர்பினூடாக வெளித் தெரியும்

i. பொதுமக்கள் தொடர்பு பற்றி இந்திய மக்கள் தொடர்பு நிறுவனம் முன்வைக்கும் வரையறையைத் தருக?

ii. ஊடக மாநாடு ஒன்றை ஒழுங்கமைக்கும் போது அவசியம் பின்பற்ற வேண்டிய **நான்கு** படிநிலைகளை எடுத்துக் கூறி அவற்றுள் **ஒன்று** பற்றி சுருக்கமாக விபரிக்குக?

iii. பாரம்பரிய ஊடகம் (Folk media) வெகுசன ஊடகம் (Mass media) புதிய ஊடகம் (New media) என்பன பற்றிய வரையறையை முன்வைத்து வெகுசனத் தொடர்பாடலின் அடிப்படைப் பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக?

iv. நிறுவனம் ஒன்றின் வெகுசனத் தொடர்பு வேலைத்திட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்தும் போது கவனத்தில் கொள்ளப்படவேண்டிய அம்சங்களினை குறிப்பிட்டு அவற்றுள் **இரண்டு** தொடர்பில் விபரிக்குக?

*07)*

i. விளம்பரங்கள் வாயிலாக நுகர்வோன் அடையக்கூடிய அனுகூலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக?

ii. அபிவிருத்தித் தொடர்பாடலில் பாரம்பரிய ஊடகங்களினை பயன்படுத்துவது பற்றி பேராசிரியர் விமல்திசநாயக்காவினால் முன்வைத்த நியாயப்பாடுகளை பட்டியற்படுத்துக?

iii. அபிவிருத்தி தொடர்பாடல் பாவனை பற்றிய மாதிரிகளில் சீனமாதிரி மற்றும் இருபடிநிலை மாதிரி ஆகியவற்றின் முக்கியத்துவம் தொடர்பில் ஆராய்க?

iv. அபிவிருத்தி தொடர்பாடல் கருத்திட்டம் ஒன்றினை தயாரித்து நடைமுறைப்படுத்தும் போது பின்பற்ற வேண்டிய ஆலோசனை முறைகளினை குறிப்பிட்டு அவற்றுள் **நான்கு** செயற்பாடுகளினை விபரிக்குக?

zgaram.lk